LIBRARY
30 AUG 1957
STATE LEGISLATURE, MAD

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 3rd May 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

I.—OBITUARY REFERENCES *RE* SRI P. T. SESHADRIACHARIAR, SRI R. S. VENKATARAMA AYYAR, SRI A. VAIKUNTAM AND SRI ANDI GOUNDAR.

MR. SPEAKER : முன்னால் இந்தச் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்த நான்கு பெரியோர்கள் இறந்துவிட்டார்கள் என்பதுபற்றி வருத்தம் தெரிவிக்க விரும்புகிறேன். முதலாவதாக இறந்துபோன ஸ்ரீ பி. டி. சேஷாத்ரியாச்சாரியார் அவர்கள் இந்த சட்டசபையில் 1937-ம் ஆண்டில் அங்கத்தினராக இருந்தவர். இரண்டாவதாக ஸ்ரீ ஆர். எஸ். வெங்கடராமய்யர் அவர்கள்—அவர்களை சாதாரணமாக எல்லோரும் மட்டப்பாரை வெங்கடராமய்யர் என்று சொல்வதுண்டு—அவர்கள் இந்த சட்டசபையில் நல்ல முறையில் பணியாற்றி இறந்துவிட்டார். மூன்றாவதாக ஸ்ரீ வைகுண்டம் என்ற பெரியவர் நம் சட்டசபை அங்கத்தினராக இருந்து பணியாற்றி இறந்துவிட்டார். கடைசியாக ஸ்ரீ ஆண்டி கவுண்டர் இந்த சட்டசபைக்குத் எற்காட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு (ஷெடுல்ட் தொகுதியில்) இறந்துவிட்டார். இவர்கள் இறந்ததற்காக கொண்டுவரப்பட்ட அனுதாபத் தீர்மானத்தை இங்கு அங்கீகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

I request the hon. Members to stand in silence for two minutes as a mark of respect to the deceased Members.

Accordingly, hon. Members stood in silence for two minutes.

II.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI P. S. KUMARASWAMI RAJA.

THE HON. SRI C. SUBRAMANIAM : கீழ் கண்ட தீர்மானத்தை நான் உங்கள் முன் பிரேரேபிக்கிறேன்.

" This House places on record its deep sense of sorrow at the demise of Sri P. S. Kumaraswami Raja, former Chief Minister of Madras from 1949 to 1952 and conveys its deep sense of sympathy to the members of his bereaved family."

ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களைப்பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவர் நம்முடைய ராஜ்ய முதல் மந்திரியாக இருந்து, பிறகு ஒரிஸ்ஸா ராஜ்யத்திற்கு கவர்னராகப் பணியாற்றி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிறப்பும், பெருமையும் இந்த அதிகாரங்களும் அவர்கள் இந்த பதவிகளை வகித்த காரணத்தினால் அல்ல. அவர்கள் சிறு வயது முதல் அதாவது 17, 18 வயது முதற்கொண்டே சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்திருக்கிறார். அவர் 19-ம் வயது ஆரம்பத்திலிருந்தே அதாவது 1917-ம் வருஷத்தில் ஹோம் ரூல் இயக்கத்தில் சேர்ந்து சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார். இதற்குப் பிறகு காந்திஜி அவர்கள் நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். 1932ம் வருஷத்தில் ஒரு முறையும், 1941-ம் வருஷத்தில் ஒரு முறையும் சிறை சென்றிருக்கிறார்கள். அவர் சிறை சென்றதோடல்லாமல் காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து சுதந்திர